பக்கங்கள் 19+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆனி 04 ஞாயிற்றுக்கிழமை 20.07.2025 | அதிர்வு 351

## மனைவியை வாளால் வெட்டி படுகொலை செய்த கணவன்!

குடும்பப் பெண் ஒருவர் வாளால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மேற்படிப் பெண்ணை அவரின் கணவனே வெட்டிப் படுகொலை செய்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

03

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



### 46 வருடங்களாகத் தமிழர்களை வருத்தும்

# பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு அடியோடு முடிவு கட்ட வேண்டும்!

### தமிழரசின் எம்.பி. சிறீதரன் இடித்துரைப்பு

இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டமானது கடந்த 46 ஆண்டுகளாக தமிழர்களை அடக்குமுறைக்குள் வைத்திருப்பதற்காகவே பயன்படுத்தப்பட்டு வந்துள்ள நிலையில் அதனை தாமதமின்றி முழுமையாக நீக்க வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் தலைவரும் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் வலியுறுத்தினார்.

03

# சர்வதேச சட்டத்துக்கமைய கச்சதீவு இலங்கைக்குக் கிடைத்து விட்டது!

### தமிழக முதலமைச்சரின் கருத்துக்கு அமைச்சர் பிமல் பதிலடி




"இலங்கையில் மின்சாரக் கதிரை கதை கூறி ராஜபக்ஷக்கள் அரசியல் நடத்தியது போல் தமிழக முதலமைச்சர் கச்சதீவு விவகாரத்தைக் கையிலெடுத்துள்ளார். சர்வதேச சட்டத்தின் பிரகாரம் கச்சதீவு இலங்கைக்குக் கிடைக்கப் பெற்றுவிட்டது. அது இலங்கைக்கு உரித்தானது."

– இவ்வாறு அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"கச்சதீவு விவகாரம் தொடர்பில் தமிழக முதலமைச்சர் வெளியிடும் கருத்துக்கள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியதில்லை. ஏனெனில் தமிழகத்தில் எழும் பிரச்சினைகளைத் திசைதிருப்புவதற்காக இந்த விவகாரம் பயன்படுத்தப்படலாம்.

தமிழக முதலமைச்சருக்கு மஹிந்த ராஜபக்ஷ போல் மின்சாரக் கதிரையை வைத்து அரசியல் நடத்தும் சூழ்நிலை இல்லை. எனவே, தமிழக முதலமைச்சர் உட்பட தமிழகத் தலைவர்கள் கச்சதீவு விவகாரத்தை அரசியலுக்காகப் பயன்படுத்துகின்றனர்.

சர்வதேச சட்டத்தின் பிரகாரம் கச்சதீவு இலங்கைக்குக் கிடைக்கப் பெற்றுவிட்டது. அது இலங்கைக்கு உரித்தானது." – என்றார்.

# கிழக்கின் பாதுகாப்பு நிலைவரம் பற்றி ஆளுநருடன் இராணுவத் தளபதி பேச்சு







இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிகோவுக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகரவுக்கும் இடையில் சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பு திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

கிழக்கில் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களின் பாதுகாப்பு விடயங்களில் இராணுவத்தின் ஈடுபாடு மற்றும் பொதுமக்களுடனான அதன் ஒத்துழைப்பு குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டன.

கிழக்கு இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜனக பல்லேகும்புர மற்றும் 22 ஆவது காலாட்படை பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் லலித் பெரேரா ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# போதைப்பொருள்களுடன் அறுவர் வசமாகச் சிக்கினர்

நாடளாவிய ரீதியில் பொலிஸார் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர்கள் அறுவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கைது நடவடிக்கைககள் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றுள்ளன.

பேலியகொடை பொலிஸ் பிரிவின் நுகேபார பகுதியில் 112 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மட்டக்குளி பகுதியைச் சேர்ந்த 45 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

மட்டக்குளி பொலிஸ் பிரிவின் கெமுனுபுர பகுதியில் உள்ள சந்தேகநபரின் வீட்டில் பொலிஸார் சோதனை மேற்கொண்டபோது 355 கிராம் ஐஸ் போதைப்பொருள், ஒரு கிலோ 465 கிராம் ஹஷிஷ் போதைப்பொருள் மற்றும் 2 கிலோ 30 கிராம் கஞ்சா என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்தோடு, கொத்தட்டுவ பொலிஸ் பிரிவின் கடுகஹவத்த பகுதியில் 10



கிராம் 370 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கொத்தட்டுவ பகுதியைச் சேர்ந்த 21 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

இதேவேளை, கடவத்தை பொலிஸ் பிரிவின் கல்வலபார பகுதியில் 7 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கடவத்தை பகுதியைச் சேர்ந்த 46 வயதுடையவராவார்.

அத்துடன், கல்கிஸை பொலிஸ் பிரிவின் மல்லிகாராம வீதிப் பகுதியில் 10 கிராம் 700 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் அத்திடிய பகுதியைச் சேர்ந்த 44 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

மட்டக்குளி பொலிஸ் பிரிவின் கதிரான பாலம் பகுதியில் 12 கிராம் 825 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மட்டக்குளி பகுதியைச் சேர்ந்த 30 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

கொழும்பு – கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவின் ஸ்டேஸ்வீதி பகுதியில் 10 கிராம் 710 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கொழும்பு – 14 பகுதியைச் சேர்ந்த 32 வயதுடையவராவார்.

இந்தக் கைது நவடிக்கைகள் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# ஓட்டோவில் வந்த நால்வரால் குடும்பஸ்தர் வெட்டிக்கொலை

## மனைவி, பிள்ளைகள் கண் முன் கொடூரம்

கூரிய ஆயுதத்தால் தாக்கிக் குடும்பஸ்தர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் வத்தளைப் பகுதியில் நேற்று சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

அந்தப் பகுதியில் உள்ள இரண்டு மாடி வீடொன்றில் இருந்த மேற்படி குடும்பஸ்தரை ஓட்டோவில் வருகை தந்த அடையாளம் தெரியாத நால்வர் கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

43 வயதுடைய வத்தளைப் பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையே சம்பவத்தின்போது கொல்லப்பட்டுள்ளார்.

மேற்படி குடும்பஸ்தர் அந்த வீட்டின் இரண்டாவது மாடியில் வாடகைக்கு வசித்து வந்துள்ளார்.

தாக்குதல் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் அவரின் மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளும் வீட்டில் இருந்துள்ளனர்.

உயிரிழந்தவர் கடந்த 2023 ஆம் ஆண்டு மஹபாகே பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டமை தொடர்பில் உதவி ஒத்தாசை புரிந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தவர் எனவும், அவர் அண்மையில் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார் எனவும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக் கைது செய்ய வத்தளை பொலிஸார் மற்றும் களனி குற்றத் தடுப்பு விசாரணைப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**பயங்கரவாத...**

பயங்கரவாதத் தடைச் சட்டம் அமுலாக்கப்பட்டு நேற்றுடன் 46 வருடங்கள் நிறைவடைந்துள்ளதை முன்னிட்டுக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“1979ஆம் ஆண்டு தற்காலிக ஏற்பாடுகள் சட்டமாகக் கொண்டு வரப்பட்ட பங்கரவாதத் தடைச் சட்டம் தற்போது வரையில் அமுலில் உள்ளது. குறித்த சட்டமானது, ஆரம்பத்தில் கொண்டு வரப்பட்ட நோக்கம் வேறாக இருந்தாலும் பிற்காலத்தில் வடக்கு, கிழக்கு உட்பட இந்த நாட்டில் உள்ள தமிழ் மக்களை இலக்கு வைத்தே பயன்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக, தமிழர்களை அடக்குமுறைக்குள் வைத்திருப்பதற்காவே இந்தச் சட்டம் பயன்படுத்தப்பட்டுள்ளது. தற்போதும் அது பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தச் சட்டத்தின் வலிகளையும், வேதனைகளையும் சுமந்த தரப்பாக அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசினர் உள்ளனர். அவர்கள் தற்போது இந்தச் சட்டத்தை அமுலில் வைத்திருப்பதற்கு முனைவது ஏற்றுக்கொள்ள முடியாதது.

தேர்தல் காலத்திலும், அதற்கு முன்னரும் ஜே.வி.பியினர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இருந்தார்கள். தற்போது பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு மாற்றுச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு அவர்கள் முயற்சிக்கின்றார்கள்.

ஜே.வி.பியின் இந்த மாற்றமானது ஏற்றுக்கொள்ள முடியாதது. ஆகவே, ஐரோப்பிய ஒன்றியம் உட்பட சர்வதேச தரப்புக்கள் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும் வரையில் உரிய அழுத்தங்களை இலங்கை அரசுக்கு வழங்க வேண்டும்.” – என்றார்.

**மனைவியை...**

இந்தச் சம்பவம் மொனராகலை மாவட்டம், பிபிலை பிரதேசத்தில் நேற்று சனிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

கூலி வேலைக்குச் சென்ற மேற்படி பெண்ணின் கணவன், நேற்று மாலை வேலை முடிந்து வீட்டுக்கு மது போதையில் வந்தார்.

இதன்போது அவருக்கும் மனைவிக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

நிறை போதையில் இருந்த கணவன், வீட்டில் வைத்திருந்த வாளால் மனைவியை வெட்டி விட்டு வீட்டை விட்டு வெளியேறினார்.

இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த மனைவி வீட்டுக்குள் இரத்த வெள்ளத்தில் வீழ்ந்து கிடந்தார்.

அவரின் 5, 7 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் கதறல் சத்தத்தால் வீட்டுக்கு வந்த அயலவர்கள், படுகாயங்களுடன் இரத்த வெள்ளத்தில் கிடந்த தாயை வைத்தியசாலையில் அனுமதித்தனர். எனினும், அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார், பிள்ளைகள் இருவரையும் பொறுப்பேற்றதுடன் தாயைக் கொலை செய்துவிட்டுத் தலைமறைவான தந்தையைக் கைது செய்வதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கேவலம் கெட்ட அரசியல்வாதி...!

'தனக்குத் தனக்கு என்றால் சுளகு படக்கு படக்கு என்று அடிக்குமாம்!' என்பார்கள். தேசிய மக்கள் சக்தி அரசும் தனக்குத் தேவையான - வசதியான - விடயங்களை மட்டும் கையாள்வதில் அவசரம் காட்டுகிறது. மற்றவற்றைத் தள்ளிப் போடுகின்றது.

நாட்டின் நிறைவேற்றதிகாரத் தரப்பு தனது அதிகாரத்தைப் பிரயோகிப்பதில் எல்லை மீறாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக - அதனை சரிபார்த்து சமநிலைப்படுத்துவதற்காக (check and balance) - கொண்டு வரப்பட்டதுதான் அரசமைப்புக் கவுன்ஸிலாகும்.

2000 ஆம் ஆண்டில் சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்த போது, எதிரணியுடன் சேர்ந்து - இணைந்து - அரசமைப்பின் 17 ஆவது திருத்தம் மூலம் இது கொண்டு வரப்பட்டது.

அரசமைப்புக் கவுன்சில் தொடர்பாக - அதன் உருவாக்கம் மற்றும் அதனுடைய அதிகாரங்கள் சம்பந்தமாக - அரசமைப்பு திருத்தங்களில் அவ்வப்போது மாற்றங்கள் வந்தாலும், அது கால் நூற்றாண்டாகத் தொடர்ந்து நீடித்தே வருகிறது.

பத்து உறுப்பினர்களைக் கொண்ட இந்த அரசமைப்பு கவுன்ஸில் பதவி வழி உறுப்பினர்களையும் குறிப்பிட்ட பதவிக் காலத்துக்கு நியமிக்கப்பட்ட சிவில் பிரமுகர்களையும் கொண்டது.

கடந்த ஆண்டில் அதிகாரத்துக்கு வந்த ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்காவுக்கும் அவரது தேசிய மக்கள் சக்தி அரசுக்கும் உயர் பதவி நியமனங்கள் தொடர்பில் தங்கள் இஷ்டப்படி நடக்க முடியாத இடைஞ்சல்களை தற்போதைய அரசமைப்புக் கவுன்ஸில் அவ்வப்போது வழங்கி வருகின்றது. அரசமைப்புக் கவுன்ஸிலில் ஆளும் தரப்புக்குத் தனித்துவ செல்வாக்கு இல்லாத காரணத்தினால், அத்தரப்பு தன் இஷ்டப்படி காரியங்களை ஆற்ற முடியாமல் - உயர் பதவி நியமனங்களைச் செய்ய முடியாமல் - தடுமாறுகின்றது.

உண்மையில், அத்தகைய கட்டுப்பாட்டை விதிப்பதற்காகத்தான் அந்த அரசமைப்பு கவுன்ஸில் முறைமையே கொண்டுவரப்பட்டது. ஆனால் இப்போது தனக்கு அதில் நெருக்கடிகள் இருக்கின்ற காரணத்தினால் அரசமைப்பு கவுன்ஸிலின் கட்டமைப்பில் தனக்கேற்றவாறான மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசு தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

அப்படி செய்வதாயின் அதற்கு அரசமைப்பில் மாற்றங்கள் செய்ய வேண்டி இருக்கும். அரசமைப்பில் சாதாரண மாற்றங்களைச் செய்வதற்கான மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தன்னிடம் இருப்பதால் தன்னிஷ்டப்படி விடயங்களை கையாள அரசு தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

புதிய அரசமைப்பு உருவாக்கம், அதுவரையில் மாகாண சபை முறைமைகளை அரசமைப்பில் உள்ள முழு ஏற்பாடுகளுக்கு அமைவாக நடைமுறைப்படுத்தல், மாகாண சபை தேர்தல்களை விரைந்து நடத்துதல் போன்றவற்றையெல்லாம் தள்ளிப் போட்டிருக்கும் இந்த அரசு, நிறைவேற்றதிகாரத்தை கட்டுப்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட அரசமைப்பு கவுன்ஸிலைத் தன்னுடைய முழுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, தன்னிஷ்டப்படி கட்டுமட்டில்லாமல் அதிகாரங்களை பிரயோகிப்பதற்காக அரசமைப்பு கவுன்ஸிலின் கட்டமைப்பு மாற்றத்தை மாத்திரம் தங்களுக்கேற்றவாறு விழுந்தடித்துச் செய்ய விரும்புகின்றது.

நிறைவேற்றதிகார ஜனாதிபதியின் கட்டுமட்டில்லாத அதிகாரத்தை கட்டுப்படுத்தி சமநிலைப்படுத்த வைத்திருந்த அரசமைப்பு கவுன்ஸிலைத் தன்னிஷ்டப்படி இயக்கக் கூடியதாக மாற்றுவது என்பது கட்டுமட்டில்லாத நிறைவேற்ற அதிகாரத்தை தன்னிஷ்டப்படி அவிழ்த்து விடுவதற்கான ஜனாதிபதியின் நடவடிக்கையாகவே இது தோற்றுகின்றது.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பேன் என்று பிரகடனப்படுத்தி ஆட்சிக்கு வந்த அநுரகுமார இப்போது அந்த பதவியின் அதிகாரத்தை மென்மேலும் வலுப்படுத்தும் மோசமான நிலையை நோக்கி நகருகின்றார். ஒருவகையில் மக்களுக்கு அளித்த வாக்குறுதியை மீறும் மற்றொரு கேவலம் கெட்ட அரசியல்வாதி தாம் என்பதை இதன் மூலம் அவரும் நிரூபித்து வருகின்றார்.



தமிழ்மக்கள் மேல் கட்டவிழ்த்த பாரிய இனப்படுகொலைகள்

# கறுப்பு ஜூலையும் வெலிக்கடை சிறை படுகொலையும்!

**1983 கறுப்பு ஜூலைப் படுகொலை ஓர் இனத்துக்கு எதிரான அழிப்பு நடவடிக்கை யாகவே தமிழ் மக்களால் கருதப்படுகிறது. சிங்களவர்கள் மற்றும் தமிழர்களுக்கு இடையில் இன ரீதியாக ஏற்பட்டிருந்த பிளவை சீர்செய்வதற்கு உரிய ஆக்கபூர்வ மான நடவடிக்கைககளும் எந்த ஒரு அரசுகளாலும் மேற்கொள்ளப்படவில்லை என்பதே உண்மையாகும்.**

- நவீனன் -

கறுப்பு ஜூலையின் கோர நிகழ்வுகள் தமிழரின் வரலாறுகளிலும், மனங்களிலும் ஒருபோதும் நீங்காத வடுக்களை பதித்துள்ளன. தமிழ் மக்கள் மேல் கட்டவிழ்த்த இனப்படுகொலை நீதி மறுக்கப்பட்டு, சர்வதேசத்தால் மறக்கப்பட்டாலும் அதிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களைப் போராடும் இனங்கள் தெளிவாகக் கற்று அறிய வேண்டும்.



1983, ஜூலை 24, 25 காலப் பகுதியில் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் சிங்கள படைத்துறையால் 100 பேர் வரையான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வுடன் ஆரம்பமாகி, வெலிக்கடை சிறைப்படுகொலை, பின்னர் தென்னிலங்கை இனப்படுகொலையாகத் தொடர்ந்து நிகழ்த்தப்பட்டன.

1983 கருப்பு ஜூலையில் இரண்டு கிழமைகளுக்கு மேலாகத் திட்டமிட்ட முறையில் சிங்கள இனவாதிகள் இலங்கைத் தமிழர்களைக் கொடுமைப்படுத்தியும், சொத்துகளை அழித்தும் கைப்பற்றியும், 3000 பேர்வரை படுகொலை செய்தமை மானுட வரலாற்றில் துன்பவியல் நிகழ்வாகும்.

இந்த நிகழ்வின் ஒருங்கிணைப்பு முறை ஒரு திட்டமிட்ட படுகொலை செயற்பாடாகவே நம்பப்படுகிறது. கறுப்பு ஜூலை நிகழ்வுகளே இலங்கை இனப்பிரச்சினை ஆயுதப் போராட்டமாக மாறக் காரணமானதாகப் பார்க்கப்படுகின்றது.

### திட்டமிடப்பட்ட இனப்படுகொலை

கறுப்பு ஜூலை "இனக்கலவரம்" என்ற போரவைக்குள் நடைபெற்றதே தமிழர் மீதான "இனப்படுகொலை" நிகழ்வாகும். ஆனால் கறுப்பு

தொடர்ச்சி ▼

# கறுப்பு ஜூலையும் வெலிக்கடை சிறை படுகொலையும்!

தொடர்ச்சி▲

ஜூலை படுகொலைகள் ஏற்கனவே திட்டமிடப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்ட முறையும் அளவும் அதற்கு அரச தரப்பில் இருந்த ஆதரவும் அதனை வெறும் இன வன்முறையாகக் கருத முடியாது. இந்த நிகழ்வின் ஒருங்கிணைப்பு முறை ஒரு திட்டமிட்ட கட்டமைக்கப்பட்ட இனப் படுகொலை செயற்பாடாகவே ஆதார பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.


தங்கதுரை குட்டிமணி ஜெகன்
ஈழத் தமிழ் மண்ணில் எங்கும் பிணத்திரள்! எங்கும் பிணநெடி!
தங்கதுரை - குட்டிமணி - ஜெகன் உட்பட
37 பேர் படுகொலை!
சிறைக்குள் சிங்களவர் வெறியாட்டம்!

மூன்று தசாப்த காலமாக நடைபெற்ற தமிழ் மக்களின் அகிம்சை போராட்டம் தோற்றுப் போக தமிழ் இளைஞர்கள் மத்தியில் புரட்சிகர ஆயுதப் போராட்டமாக மாறுவதற்கு தேவையான வலிமையை கறுப்பு ஜூலை வலிகளில் இருந்தே ஈழத்து தமிழ் மக்கள் பெற்றார்கள் என்பதும் உண்மையே.

ஏற்கனவே திட்டமிட்டப்பட்டிருந்தபடி கொழும்பிலும் ஏனைய சிங்களப் பகுதிகளிலும் தமிழ் மக்கள் மீதான வன்முறைகளை ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் அரசு கட்டவிழ்த்துவிட்டது. உண்மையில் இக்கோர கறுப்பு யூலை நிகழ்வுகளே ஈழத்து தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்தி போராட தூண்டியது என்றும் கூறலாம்.

## சிங்களப் பேரினவாத தரப்படுத்தல்

ஈழத் தமிழினம் டீ.எஸ். சேனநாயக்கா போன்ற சிங்களப் பேரினவாதத் தலைவர்களால் காலத்துக்குக் காலம் பொருளாதார ரீதியாகவும், நில உரிமை ரீதியாகவும், மொழி ரீதியாகவும் நயவஞ்சகமாகவும் நேரடியாகவும் நசுக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அவற்றுக்கெதிராக அவ்வப்போது சில அரசியல் தலைவர்களது குரல் ஒலிப்பதும், சில அற்பசொற்ப சலுகைகளுக்காக அடங்கிப் போவதும் நாம் கண்ட வரலாறாகும்.

தமிழினத்தை தன்னிலைபற்றிச் சிந்தித்து, தனக்கென ஒரு நாடு தேவை என்ற தீர்வைக் கொடுத்தது என்னவோ, சிறீமாவோ பண்டாரநாயக்கா அம்மையாரது ஆட்சிக் காலத்தில் அமுல்படுத்தப்பட்ட “தரப்படுத்தல்” என்ற தமிழ் மாணவரது கல்வியை நசுக்கும் செயல்தான் என்பதை எவராலுமே மறுக்கமுடியாது.

தரப்படுத்தல் சிவகுமாரன் போன்ற மாணவர்களை அகிம்சை வழியிலிருந்து விலகி ஆயுதங்கள் பக்கமாகச் சிந்திக்கத் தூண்டியது. அரச பயங்கரவாதச் சுரண்டல்களுக்குப் பரிகாரம் ஆயுதப் போராட்டமே என்ற எண்ணம் பல இளைஞருள்ளும் அக்காலத்தில் எழுந்தது.

அரச படை இயந்திரங்களை எதிர்த்துப் போரிட முடியுமா என்ற கேள்வியே ஈழத் தமிழினத்தால், குறிப்பாக தமிழின அரசியல் மேடைப் பேச்சுத் தலைவர்களால் நினைத்துப் பாராத ஒன்றாக இருந்தது. ஈழத்தமிழனின் கல்வியில் திணிக்கப்பட்ட தரப்படுத்தலானது இளைஞர்களை ஆயுதங்கள் பக்கமாகச் சிந்திக்கத் தூண்டியதும் வரலாற்று உண்மையாகும்.

திருநெல்வேலி தாக்குதலும் அதைத் தொடர்ந்து எழுந்த அரச பயங்கரவாத ஆதரவுடன் இடம்பெற்ற இனக்கலவரமும் ஈழப் போராட்ட அமைப்புகளின் பாரிய வளர்ச்சிக்கு வழிவகுத்தது.

தொடர்ச்சி▼





# கறுப்பு ஜூலையும் வெலிக்கடை சிறை படுகொலையும்!

தொடர்ச்சி▲

### கறுப்பு ஜூலையில் வெலிக்கடை சிறை படுகொலை

ஜூலை 1983 இல் இலங்கையில் இலங்கைத் தமிழர்களுக்கெதிராக இடம்பெற்ற கறுப்பு ஜூலை வன்முறை நிகழ்வுகளின் போது இடம்பெற்ற உச்சக்கட்ட நிகழ்வே வெலிக்கடை சிறைப் படுகொலையாகும்.

இதன் போது மொத்தம் 53 தமிழ் அரசியல் கைதிகள் கொழும்பின் அதிஉயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் சக சிங்களக் கைதிகளால் குத்தியும் வெட்டியும் படுகொலை செய்யப்பட்டனர். இப்படுகொலை நிகழ்வில் எவரும் இன்று வரையில் குற்றஞ்சாட்டப்பட்டுத் தண்டிக்கப்படவில்லை.

வெலிக்கடை சிறைப் படுகொலை இரண்டாம் தடவையாக ஜூலை 28 ஆம் திகதி மீண்டும் இடம்பெற்றது. இதில் 18 பேர் வெட்டிக் கொல்லப்பட்டனர். இந்தப் படுகொலை நிகழ்வில் தப்பிப்



பிழைத்தவர்களின் வாக்குமூலத்தின் படி சிறைச்சாலை அதிகாரிகளே அறைக் கதவுகளின் திறப்புகளை சிங்களக் கைதிகளுக்கு கொடுத்ததாகத் தெரிவித்தனர். ஆனால் சிறை அதிகாரிகளின் கூற்றுப்படி, சிங்களக் கைதிகள் தம்மிடம் இருந்து திறப்புகளைக் களவெடுத்ததாகத் தெரிவித்தனர்.

இந்தப் படுகொலை நிகழ்வில் தப்பிப் பிழைத்தவர்களின் வாக்குமூலத்தின்படி சிங்கள



இனவெறியர் அங்கு அமைக்கப்பட்டிருந்த புத்த விகாரையின் புத்தர் சிலையின் முன் கொல்லப்பட்ட குட்டிமணியின் உடலை நிர்வாணமாக்கிப் போட்டார்கள். இவ்வாறாக ஜெகனின் கண்களும் தோண்டப்பட்டு ஆணுறுப்பு வெட்டப்பட்டு அவரின் உடலும் நிர்வாணமாகப் புத்தர் சிலையின் முன்னால் வீசப்பட்டது.

காட்டுமிராண்டித் தனமான கூச்சல்களுக்கு மத்தியில் ஏனைய தமிழ் இளைஞர்களும் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டு, நிர்வாணமாக்கப்பட்டு புத்தரின் காலடியில் எறியப்பட்டனர்.

சிங்கள இன வெறியர்கள், தமிழிளைஞர்களின் தலைகள், கண்கள், கால்கள், கைகள், உடல்கள், செங்குருதி யாவற்றையும் புத்தருக்கு காணிக்கையாக அளித்தனர். இப்படுகொலைகள் நடைபெற்ற தினத்துக்கு முதல்நாள் புத்தர்களின் புனிதநாளான போயா தினமாகும். போயா தினத்தில் உபவாசம் இருந்து "சில்" அனுஷ்டித்தவர்கள் மறுநாள் இப்படுகொலையில் சம்பந்தப்பட்டிருந்தனர் என இந்தப் படுகொலை நிகழ்வில் தப்பிப் பிழைத்தவர்களின் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்களவர்கள் மற்றும் தமிழர்களுக்கிடையில்

தொடர்ச்சி▼

# கறுப்பு ஜூலையும் வெலிக்கடை சிறை படுகொலையும்!

தொடர்ச்சி▲

இனரீதியாக ஏற்பட்டிருந்த பிளவை சீர்செய்வதற்கு உரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைககளும் எந்த ஒரு அரசுகளால் மேற்கொள்ளப்படவில்லை.

42 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற இந்த இனப் படுகொலை ஓர் இனத்துக்கு எதிரான அழிப்பு நடவடிக்கையாகவே இலங்கைத் தமிழ் மக்களால் கருதப்படுகிறது.





# கன்னியா வெந்நீருற்று பொறுப்பை மீளவும் பிரதேச சபைக்கு வழங்கவும்

## சண்முகம் குகதாசன் எம்.பி. கோரிக்கை

**(ஹஸ்பர் ஏ.எச்.)**

கன்னியா வெந்நீர் ஊற்றுக் கிணறுகளை பராமரிக்கும் பொறுப்பு நெடுங்காலமாகப் பட்டணமும் சூழலும் பிரதேச சபையிடம் இருந்தது. இடைக்காலத்தில் இப்பொறுப்பு தொல்பொருள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. அதனை மீளவும் பட்டணமும் சூழலும் பிரதேச சபையிடம் ஒப்படைக்க வேண்டும் என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டம் (18) மாலை பிரதேச செயல மண்டபத்தில் இடம் பெற்றது அதன் போது தனது பிரேரனைகளை முன்வைத்தார்.

குறித்த பிரேரனையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

திருகோணமலை பொது மீன் சந்தைப் பகுதியில் இருந்து மூன்றாம் கட்டை வரையான கடல் பகுதியில் உள்ள மீன் பிடி படகுகள் மாரி காலத்தில் கடல் பெருக்கால் கடலுக்குள் இழுத்துச் செல்லப்படுகின்ற சூழல் காணப்படுகின்றது. இது மீனவர்கள் எதிர் கொள்ளும் மிகப்பெரிய சவாலாக உள்ளது. இதனைத் தடுக்கும் வகையில் கடலோரத்தில் வள்ளங்கள் நிறுத்தக் கூடிய வகையில் அடுக்கு மாடிப் படகு தரிப்பிடம் ஒன்றை அமைக்க வேண்டும்.

வாகன ஓட்டுநர்களின் நன்மை கருதிக் கன்னியாப் பகுதியில் ஒரு எரிபொருள் நிரப்பு நிலையம் அமைக்க, பட்டணமும் சூழலும் பிரதேச சபைக்கு ஒப்புதல் அளிக்க வேண்டும்.

திருகோணமலை மாநகர சபை எல்லைக்குள் அடங்கும் 4 ஆம் கட்டைச் சந்தி, அனுராதபுரச் சந்தி, அபயபுரச் சந்தி, உவர்மலை சுற்றுவட்டச் சந்தி, மரத்தடிச் சந்தி , பொதுப் பஸ் நிலையச் சந்தி, மாநகர சபைச் சுற்றுவட்டச் சந்தி, துறைமுக காவல் நிலையச் சந்தி ஆகியவற்றில் வழிச்செல் சமிக்கை விளக்குகள் பொருத்த ஆவன செய்ய வேண்டும்.

பட்டணமும் சூழலும் பிரதேச சபையின் கீழ் உள்ள வீதிகளில் இரவு நேரங்களில் வெளிச்சம் இன்மை காணப்படுகின்றது. இதனால் மக்கள் மிகவும் இடர் படுகின்றனர். எனவே இவ்வீதி விளக்குகளைப் பொருத்த பிரதேச சபைக்கு நிதி வழங்க வேண்டும்.

அன்புவழிபுரம், செல்வநாயகபுரம், வரோதயநகர் ஆகிய கிராமங்களில் வதியும் மக்கள் குடி தண்ணீரைப் பெறுவதில் இன்னல் படுகின்றனர். இச்சிக்கலை தீர்க்கும் பொருட்டாக இந்த மூன்று கிராமங்களுக்கும் நீர் வழங்கும் வகையில் ஒரு நீர்த்தொட்டி அமைக்க செய்ய வேண்டும்.- என்றார்.

# சுவாமி விபுலானந்தர் அடிகளாரின் 78 ஆவது நினைவு உவர்மலையில்





**(கீதபொன்கலன்)**

உவர்மலை முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் அடிகளாரின் 78 ஆவது நினைவுதினம் நேற்று (19) காலை கன்னியா இராவணேஸ்வரன் தமிழ் வித்தியாலயத்தில் விபுலானந்தர் இணையக்கல்விக் கழகத்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நிகழ்வின் போது, திருகோணமலை வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுமதியுடன் மாணவர்களுக்கான இரண்டு நாள் சுயகற்றல் பயிற்சி செயலமர்வும் மட்டக்களப்பு வலயக்கல்வித் திணைக்களத்தின் வளவாளர்களைக் கொண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதற்கான நிதி அனுசரனையை விபுலானந்தா இணையக் கல்விக்கழகமும், கன்னியா விஸ்டம் கல்வி நிலையமும் வழங்கியிருந்தன.

# பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குக் கொடுப்பனவு வழங்கமுடியாத அமைப்புகள் தேவையில்லை

## முல்லைத்தீவிலிருந்து வெளியேறுமாறு எச்சரித்தார் ரவிகரன் எம்.பி.



(விஜயரத்தினம் சரவணன்)

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நெல் அழிவுக்கான கொடுப்பனவுகளை வழங்காவிட்டால் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபைக்கு எதிராகப் போராட்டம் மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் எச்சரித்துள்ளார்.

அத்தோடு குறித்த கொடுப்பனவுகளை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உடனடியாக வழங்கத்தவறினால் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து உடனடியாக வெளியேற வேண்டும் எனவும் மிகக் கடுமையாக எச்சரித்தார்.

முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் கடந்த காலத்தில் இடம்பெற்ற நெல் அழிவுகளுக்கான கொடுப்பனவுகள் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையால் இதுவரை வழங்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட விவசாயிகளால் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

இதன்போதே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேற்கண்டவாறு எச்சரித்திருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் மிகக் கடுமையான இந்த எச்சரிப்பையடுத்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஒரு வாரத்துக்குள் நெல் அழிவுகளுக்கான கொடுப்பனவுகளை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையால் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நாம் தொடர்ந்து வன்னிப் பகுதியிலுள்ள அனைத்து அபிவிருத்தி ஒருங்கிணைக்குழுக் கூட்டங்களிலும் கலந்துகொள்கின்றோம். அந்தவகையில் மன்னாரில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபையால் நெல் அழிவுக்கு உரிய கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆனால் முல்லைத்தீவு மாவட்டத்தில், இந்த புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நெல்அழிவிற்கான கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லை.

இவ்வாறு நெல் அழிவுக்கான கொடுப்பனவுகள் உரிய பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இதுவரை வழங்கப்படாமைக்கான காரணம் என்ன. கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச்சபையினர் இவ்வாறான அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களுக்கு வருகைதந்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கொடுப்பனவுகள் உடனடியாக வழங்கப்படுமென்கின்ற பொய்களை இங்கே கூறிக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் தொடர்ந்தும் இங்கு வந்து இவ்வாறு பொய்களைக் கூறிக் கொண்டிருக்க முடியாது.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஒருவாரத்துக்குள் நெல் அழிவுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவேண்டும். அவ்வாறு வழங்கத் தவறினால் விவசாயிகளுடன் இணைந்து போராட்டத்தில் ஈடுபடவேண்டிய நிலை ஏற்படும்.– என்றார்.

# ஐந்து ஆண்டு வேலைத் திட்டத்தில் இரண்டு தொங்கு பாலங்கள் திருத்தம்

## நோர்வூட் பிரதேச சபையின் தவிசாளர் பிரான்சிஸ் ஹேலன் தெரிவிப்பு





(பொகவந்தலாவ எஸ். சதீஸ்)

நோர்வூட் பிரதேச சபைக்கு உட்பட்ட பொகவந்தலாவ எல்பட கீழ் பிரிவு மற்றும் மேல் பிரிவு ஆகிய தோட்ட பகுதியைச் சேர்ந்த மக்கள் நளாந்தம் போக்குவரத்துக்குப் பயன்படுத்தும் இரண்டு தொங்கு பாலங்களும் எமது ஐந்தாண்டு வேலைத் திட்டத்தில் அபிவிருத்தி செய்யப்படும்.

இது தொடர்பாக மத்திய மாகாண ஆளுனயாளரிடம் முன் மொழிவு ஒன்றை முன் வைத்துள்ளோம்.

நோர்வூட் பிரதேச சபையின் தவிசாளர் பிரான்சிஸ் ஹேலன் இவ்வாறு தெரிவித்தார்.

வியாழக்கிழமை மாலை குறித்த பகுதிக்கு நேரடி விஜயம் மேற்கொண்டு அதனை பார்வையிட்ட போதே அவர் இதனை தெரிவித்தார். இதன்போது மேலும் தெரிவிக்கையில்,

இதில் ஒரு தொங்கு பாலம் 95 அடி நீளமும் நான்கு அடி அகலமும் கொண்டதாகும். இந்த பிரதேச இளைஞர்கள் ஊடாக இங்கு மேற்கொள்ளப்பட்ட சிரமதான பணிக்கு நோர்வூட் பிரதேச சபையின் ஊடாக நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

நான் இந்த பிரதேச சபைக்கு தவிசாளராக தெரிவு செய்யப்பட்டு இன்னும் ஒரு மாதங்கள் கூட செல்லவில்லை. இந்த பாலத்தை நாம் பாதுகாக்க வேண்டும். இந்தப் பிரதே மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து இது போன்ற வேலைத் திட்டத்தை முன்னெடுப்பது தேசிய மக்கள் சக்தியின் கொள்கையாகும்.

பொறியியலாளர்களை அழைத்து வந்து இந்த வேலைத் திட்டத்தை எவ்வாறு முன்னெடுப்பது குறித்து விரைவில் ஆராயவிருக்கிறோம். தொங்குபாலம் என்பது எமது பிரதேசத்தில் இது மாத்திரமே காணப்படுகிறது .

வெகுவிரைவில் இந்தப் பாலத்தைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.– என்றார்.



# யான் ஓயா திட்டத்தை விரிவுபடுத்துவதால் 500 ஏக்கரில் நெல் பயிர் செய்யலாம்!

## சண்முகம் குகதாசன் எம்.பி. சுட்டிக்காட்டு

(ஹஸ்பர் ஏ.எச்.)

யான் ஓயா திட்டத்தின் கீழ் அடங்கும் நான்கு குளங்களில் இருந்து வரும் கழிவு நீரானது புலிகுத்தி ஆறின் ஊடாக ஓடிக் கடலில் வீணாக கலக்கின்றது.

மாகாண நீர்ப்பாசனத் திணைக்களமானது கடந்த ஆண்டு இந்த ஆற்றுக்கு குறுக்கே தற்காலிகமாக மண் சாக்கு அணைகட்டி 300 ஏக்கரில் விவசாயம் செய்ய நீர் வழங்கியது.

இங்கு நிரந்தரமான ஓர் அணைக்கட்டை அமைப்பதன் மூலம் அண்ணளவாக 500 ஏக்கர் நிலத்தில் நெற்செய்கை மேற்கொள்ளலாம். நாட்டின் அரிசி உற்பத்தியையும் அதிகரிக்கலாம்.




இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கை தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

குச்சவெளியில் இடம் பெற்ற பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் போதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு தெரிவிக்கையில்,

பதவியாவில் உள்ள ஜெயந்திவெவ குளத்தில் இருந்துவரும் கழிவு நீரானது வண்ணான்துறை ஆறு, குண்டாறு ஆகியவற்றின் ஊடாக ஓடி கடலில் வீணாகக் கலக்கின்றது. வண்ணான்துறை ஆற்றின் குறுக்கே ஓர் அணைக்கட்டு உள்ளது. இதனை மறுசீரமைத்தால் தென்னமரவடி கிராம சேவையாளர் பிரிவில் உள்ள 300 ஏக்கர் நெற்செய்கைக்கு நீர் வழங்கலாம். இதன் மூலம் அரிசி உற்பத்தியைப் பெருக்கலாம்.

குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் அடங்கும் நீலபணிக்கன் குளமானது திரியாய் வட்டாரத்தில் வதியும் மக்களுக்கு உரித்தாக உள்ளது. எனினும் மேற்படி குளத்தில் மீன் பிடிக்கும் உரிமையை திரியாய் நன்னீர் மீன்பிடிச் சங்கத்துக்கு வழங்காமல் வேறோர் ஊரில் உள்ள சங்கத்துக்கு வழங்கப் பட்டுள்ளது. இந்த மீன்பிடி உரிமையை திரியாய் நன்னீர் மீன்பிடிச் சங்கத்துக்கு வழங்க வேண்டும்.

2025 ஆம் ஆண்டில் நடைமுறைப் படுத்தப்படும் கிராமிய வீதி வேலைத் திட்டம், பி.எஸ்.டி.ஜி. வேலைத்திட்டம் என்பவற்றின் கீழ் குச்சவெளி பிரதேச சபைப் பிரிவில் 12 கிலோ மீற்றர் வீதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

எனினும் குச்சவெளி பிரதேச சபை பிரிவில் எல்லா வட்டாரங்களில் இருந்தும் வீதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ள போதும் திரியாய் வட்டாரத்தில் இருந்து ஒரு வீதியும் தெரிவு செய்யப்படவில்லை. திரியாய் பாடசாலையில் தொடங்கி புல்மோட்டை வீதியில் இணையும் கோவில் வீதியும் நீலப்பணிக்கன் குளத்திற்குச் செல்லும் வீதியும் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன. இவற்றை மறுசீரமைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

திருகோணமலையில் இருந்து வடக்கு நோக்கி செல்லும் பஸ்கள் முன்னர் கல்லம்பற்றை, தென்னமரவடி கிராமங்கள் ஊடாக சென்று வந்தன. இப்பொழுது அவை அவ்வாறு செல்வதில்லை.இதனால் அவ்வூர்களில் வாழும் மக்கள் மிகுந்த துன்பத்துக்கு ஆளாகின்றனர். எனவே இந்தப் பஸ் சேவைகளை மீள இயக்க வேண்டும்.நிலாவெளி கிராம சேவையாளர் பிரிவில் உள்ள மாரியம்மன் வீதியானது 02 கிலோ மீற்றர் நீளமானது. இதில் 01 கிலோ மீற்றர் வீதி மாத்திரமே நீண்ட காலத்துக்கு முன்பு மறுசீரமைக்கப் பட்டுள்ளது. எஞ்சிய 01 கிலோ மீற்றர் வீதியை மறுசீரமைக்க வேண்டும்.

கோணேசபுரி தொடக்கம் இறக்கக்கண்டி வரை உள்ள கடற்பகுதியில் அனுமதி பெறாத படகு உரிமையாளர்கள் சுற்றுலா பயணிகளைக் கூட்டிச் சென்று கடல்வாழ் உயிரினங்களான சுறா, திமிங்கிலம் ஆகியவற்றுக்கு தீங்கு செய்வதோடு காயத்தையும் விளைவிக்கின்றனர். இதனை தடுத்து நிறுத்த ஆவன செய்ய வேண்டும்.

கும்புறுப்பட்டி வட்டாரத்தில் அடங்கும் சலப்பையாறு கிராம மக்கள் யானைத் தொல்லையால் மிகவும் இன்னல் படுகின்றனர். இந்தக் கிராமத்துக்கு யானை வராமல் தடுக்க யானை வேலி அமைக்க வேண்டும்.

சலப்பையாற்றுக் கிராமத்தில் உள்ள இளையோர் பொழுது போக்கு வசதியின்மையால் வேறு திசைகளில் செல்லக் கூடிய சூழல் காணப்படுகின்றது. இதனை தவிர்க்கும் பொருட்டாக அவர்களுக்கு ஒரு விளையாட்டு அரங்கினை அமைக்க இடம் ஒதுக்கி கொடுக்க வேண்டும்.

பண்டவாச்சி விவசாய வீதியானது அண்ணளவாக 150 விவசாயிகள் பயன்படுத்தும் 03 கிலோ மீற்றர் நீளமான வீதியாகும். இது கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக செப்பனிடாமல் உள்ளது. இதனை விரைவாக மறுசீரமைக்க வேண்டும்.– என்றார்.



# பொன்மணி அறக்கட்டளை நிறுவனத்தின் செயலமர்வு

**(பொகவந்தலாவ எஸ். சதீஸ்)**

பொன்மணி அறக்கட்டளை நிறுவனத்தின் ஏற்பாட்டில் இம்முறை புலமை பரீசில் பரீட்சைக்கு தோற்ற உள்ள மலையகத்தின் கஸ்டபிரதேச பாடசாலையின் மாணவர்களுக்கான செயலமர்வு நேற்று சனிக்கிழமை பொகவந்தலாவ தெரேசியா தமிழ் வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

பொன்மணி அறக்கட்டளை நிறுவனத்தின் ஸ்தாபக தலைவர் முத்து குமாரின் என்கருவுக்கு அமைவாக புலமை பரீசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு வினா பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பொன்மணி அறக்கட்டளை நிறுவனத்தின் இணைப்பாளர் கணேசன் இளையராஜா, தெரேசியா தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் விக்னராஜா, ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்தச் செயலமர்வில் தெரேசியா தமிழ் வித்தியாலயம், சிங்காரவத்த தமிழ் வித்தியாலயம், கெர்க்கஸ்வோல்ட் இல. 02 தமிழ் வித்தியாலயம், கெர்க்கஸ்வோல்ட் இல 01 தமிழ் வித்தியாலயம், போனோகோட் தமிழ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளை சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.










# இரு வருடங்களில் 10 கோடி ரூபா செலவில் 3 ஆயிரம் பேருக்கு இலவச இதய சிகிச்சை!

**(வி.ரி.சகாதேவராஜா)**

100 மில்லியன் ரூபா செலவில் முற்றிலும் இலவச 3000 உயிர் காக்கும் சேவைகள் நிறைவு பெற்றுள்ளன.

மட்டக்களப்பு கிரான்குளத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சத்ய சாய் சஞ்சீவினி வைத்தியசாலை கேத் லேப் ஆரம்பிக்கப்பட்டு 02 வருடங்களே ஆன நிலையில் கடந்த 15 ஆம் திகதி வரை 3000 நோயாளிகளுக்கு முற்றிலும் இலவச இருதய சிகிச்சை வழங்கியுள்ளது.

தனியார் வைத்தியசாலைகள் ஒரு நபருக்கு 1 லட்சம் ரூபா தொடக்கம் 10 லட்சம் ரூபாவரை கட்டணமாக அறவிடும் இந்தச் செயற்பாட்டை முற்றிலும் இலவசமாக இந்த வைத்தியசாலை வழங்கி வருகின்றது. இது எம்மில் பலரும் அறியாத ஒரு விடயம் ஆகும்.

அது மட்டுமின்றிக் கிழக்கு மாகாணத்தில் இந்த சேவையை வழங்கும் ஒரே ஒரு வைத்தியசாலை இதுவாகும். இங்கு அனைத்து சேவைகளும் இலவசமாக வழங்கப்படுகிறது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இருந்த சிகிச்சை குழுவின் பூரண பங்களிப்புடன் இருதய சிகிச்சை நிபுணர்களான டாக்டர் வினோதன், டாக்டர் அருள்நிதி, டாக்டர் ரஜீவன் மற்றும் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை இருதய சிகிச்சை நிபுணர் டாக்டர் சந்துன் ஆகியோர் சேரையாற்றி வருகின்றனர்.

2023.06.01 திகதி ஆரம்பிக்கப்பட்டு இந்தச் சேவையானது 100 மில்லியனுக்கும் அதிக பணத்தை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் நன்கொடையாக பெற்று எமது பிரதே மக்களுக்கு சேவை வழங்கி வருகின்றது.

இந்த நிறுவனம் அரச அங்கீகாரம் பெற்ற ஒரு தொண்டு நிறுவனமாகையால் பல நல் உள்ளம் கொண்ட கொடையாளர்கள் நன்கொடை வழங்குகின்றார்கள்.

இவ் வைத்தியசாலையின் ஸ்தாபாகர் சுவாமி ஸ்ரீ மதுசூதன் சாயின் ஆசிர்வாதமும், தலைவர் திருமதி. பென்னி ஜெயவர்தனவின் வழிநடத்தலிலும் பொது முகாமையாளர் டேவிட்டின் சேவையும் இங்கு முக்கிய பங்காகின்றன.

இங்கு இந்த வருட இறுதியில் இருதய சத்திர சிகிச்சைகள் இலவசமாக இடம் பெறவுள்ளன.அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# திருமலை மாவட்ட தொழிலாளர்களின் விடுமுறை தொடர்பில் கலந்துரையாடல்

(ஏ.எச்.ஹஸ்பர்)



தொழிலாளர் அமைச்சின் வேண்டுகோளின் பேரில், திருகோணமலை மாவட்டத்தில் தொழிலாளர்களின் விடுமுறை தொடர்பாக சம்பந்தப்பட்ட வணிகர்களுடன் கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் (18) தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன தலைமையில் மாவட்ட செயலக உப ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட ஊழியர்கள் தொழிலாளர் அமைச்சகத்துக்கு அனுப்பிய அநாமதேய முறைப்பாட்டைத் தொடர்ந்து இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள வணிகர்களுடனான கலந்துரையாடலின் போது, முறைப்பாட்டின் படி சட்டத்தை செயல்படுத்துவதற்கான வாய்ப்பு, முறைப்பாட்டாளர் தங்கள் அறிக்கைகளைப் பதிவு செய்ய முன்வராதது, துல்லியமான பதிவுகளை பராமரிக்கத் தவறியது, கடைக்காரர்கள் மற்றும் அலுவலக ஊழியர்களின் சட்டம் குறித்து வணிகர்கள் மற்றும் ஊழியர்களுக்கு விழிப்புணர்வு இல்லாமை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, அனைத்து வணிகர்களுக்கும் சட்டம் குறித்த புரிதலை வழங்கும் வகையில் வரும் நாள்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்த முடிவு செய்யப்பட்டது.

இதன்போது திருகோணமலை மாநகர சபையின் பதில் ஆணையாளர் யூ. சிவராஜா, திருகோணமலை மாவட்ட தொழிலாளர் துறை உதவி ஆணையாளர் ஜி. நவஜீவனா, துறைசார்ந்த அதிகாரிகள், திருகோணமலை மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ். ஆர்.கே.எஸ். குருகுலசூரிய என பலரும் கலந்து கொண்டனர்.







# இலங்கை வங்கியின் சேவைகள் தபாலகங்கள் ஊடாக விஸ்தரிப்பு

(வாஸ் கூஞ்ஞ)

கிராமபுற மக்கள் வங்கி சேவைகளை இலகுவாக பெற்றுக் கொள்ளும் முகமாக இலங்கை வங்கி தனது சேவையை விஸ்தரிக்கும் நோக்குடன் இலங்கை வங்கியானது தபாலகங்கள் ஊடாக சேவையை முன்னெடுத்துச் செல்லுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இதன் நடவடிக்கையாக நாடு பூராகவும் முதல் முறையாக நூறு தபாலகங்களை தெரிவு செய்து இலங்கை வங்கி கணக்கு ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இதில் மன்னார் மாவட்டத்தில் வங்காலை தபாலகம் தெரிவு செய்யப்பட்டு இதற்கான ஆரம்ப உத்தியோக பூர்வமாக நிகழ்வை வியாழக்கிழமை நடத்தியது.

அதாவது இந்தத் திட்டத்துக்கான உபகரணம் வங்காலை தபால் அதிபர் திருமதி இந்துமதி குருபரனிடம் கையளிக்கப்பட்டது.

மன்னார் பிராந்திய தபால் அத்தியட்சகர் அருள்செல்வம், இலங்கை வங்கி பிராந்திய முகாமையாளர் மற்றும் அயல் இலங்கை வங்கி முகாமையாளர்கள், வங்காலை உதவி பங்குதந்தை உட்பட இந்தக் கிராமத்தின் பிரதி நிதிகள், நலன் விரும்பிகள் என பலரும் இதில் கலந்து கொண்டனர்.

இதன் சேவையின் மூலம் இலங்கை வங்கியில் எந்த சேவையை பெற முடியுமோ அந்த சேவைகளை இந்தத் தபாலகத்தின் மூலம் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# காச நோயைக் கட்டுப்படுத்தும் திட்டம்; தாதிய உத்தியோகத்தருக்குப் பயிற்சி!










**(பாறுக் ஷிஹான்)**

கல்முனை பிராந்தியத்தில் இருந்து காச நோயை இல்லாதொழிக்கும் நோக்கில், பிராந்திய மார்பு நோய் சிகிச்சை நிலையம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

குறித்த வேலைத் திட்டத்துக்கு இணங்க காச நோயைக் கட்டுப்படுத்துதல் அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முறையாக சிகிச்சையளித்தல் தொடர்பாக தாதிய உத்தியோகத்தர்களின் திறனை மேம்படுத்துமுகமாக ஏற்பாடு செய்யப்பட்ட திறன்விருத்தி பயிற்சி செயலமர்வு கடந்த திங்கள் மற்றும் செவ்வாய் ஆகிய இரு தினங்கள் பிராந்திய பணிமனையில் இடம்பெற்றது.

பிராந்திய மார்பு நோய் சிகிச்சை நிலையத்தின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எல்.ஏ.கபூர் ஒருங்கிணைப்பில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகிலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் போது பிராந்திய மார்பு நோய் சிகிச்சை நிலையத்தின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எல்.ஏ.கபூர் இந்தச் செயலமர்வின் நோக்கம் பற்றியும், காச நோய் தொடர்பாகவும் கடந்த கால புள்ளி விவரங்களுடன் விளக்கமளித்தார்.

அத்துடன் காசநோயை எதிர் காலத்தில் பிராந்தியத்தில் முற்று முழுதாக இல்லாதொழிப்பதற்காக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விளக்கமளித்தார்.

மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையின் சுவாச நோயியல் விஷேட வைத்திய நிபுணர் டாக்டர் ஆர்.மன்மதன், அம்பாறை மாவட்ட பொது வைத்திய சாலையின் சுவாச நோயியல் விஷேட வைத்திய நிபுணர் டாக்டர் ஜீ.பி.அத்துகொரல, கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும் விஷேட நுண்ணுயிரியல் வைத்திய நிபுணருமான டாக்டர் வைதேகி ரஜீவன் பிரான்சிஸ், பிராந்திய மார்பு நோய் சிகிச்சை நிலையத்தின் சிரேஷ்ட வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எச்.எம்.டீ.மபாஸ் ஆகியோர் இந்த நிகழ்வில் வளவாளர்களாக கலந்து கொண்டு காசநோய் தொடர்பாகவும் அதனை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் தொடர்பாகவும் விளக்கமளித்தமை குறிப்பிடத்தக்கது.

# விஜயின் தமிழக வெற்றிக் கழகத்தின் செயலியில் தொழில்நுட்ப பிரச்சினை



தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தலை சந்திப்பதற்குத் தீவிர மாகத் தயாராகி வருகின்றார்.

இதன்படி தமிழக வெற்றிக் கழகத்தின் 2ஆவது மாநில மாநாட்டை ஒகஸ்ட் 25ஆம் திகதி நடத்துவதற்கு விஜய் திட்டமிட்டுள்ளார்.

இந்தநிலையில் தமிழக வெற்றிக் கழகத்துக்கு புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதற்காக “மை டி.வி.கே.” என்ற புதிய செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த செயலியை விஜய் இன்று அறிமுகப்படுத்தத் திட்டமிட்டிருந்த நிலையில், குறித்த நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

டி.வி.கே. செயலியில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப பிரச்சினை காரணமாகவே அதன் தொடக்க விழா ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து எதிர்வரும் 24ஆம் திகதி செயலியின் தொடக்க விழா மற்றும் மாவட்ட செயலாளர்களுடனான ஆலோசனைக் கூட்டம் ஆகியவை நடைபெறவுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.




# வளர்ச்சி அடைந்த பிஹாரை உருவாக்க மத்திய அரசு தீவிரமாக செயல்படுகிறது

## பிரதமர் மோடி தெரிவிப்பு

வளர்ச்சி அடைந்த மாநிலமாக பிஹாரை உருவாக்க மத்திய அரசு தீவிரமாக செயல்பட்டு வருகிறது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அரசு நலத்திட்ட உதவிகளை தொடங்கி வைப்பதற்காக பிரதமர் மோடி, நேற்று முன்தினம் பிஹார் மாநிலத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். பிஹார் சென்ற பிரதமர் மோடியை, முதல்வர் நிதிஷ்குமார், துணை முதல்வர்கள் சாம்ராட் சவுத்ரி, விஜய் சின்ஹா உள்ளிட்டோர் வரவேற்றனர்.

இதைத் தொடர்ந்து மோதிஹரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சுமார்7,200 கோடி இந்திய ரூபா மதிப்பிலான திட்டங்களுக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்.

மேலும், பாட்னாவில் இருந்து டில்லி, மோதிஹரியில் இருந்து டெல்லி, தர்பாங்காவில் இருந்து லக்னோ, மால்டா நகரில் இருந்து லக்னோவுக்கு இடையிலான அம்ரித் பாரத் ரயில் சேவைகளை பிரதமர் மோடி கொடியசைத்து தொடங்கி வைத்தார். பின்னர் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பிரதமர் மோடி உரையாற்றுகையில்,

முன்பு இருந்த காங்கிரஸ், ராஷ்டிரிய ஜனதா தள அரசுகள் பிஹார் மாநிலத்தைப் புறக்கணித்தன. இதனால் அந்த மாநிலத்துக்கு நிதி ஒதுக்குவதில் அந்த அரசுகள் சுணக்கம் காட்டின. பிஹாரில் நிதிஷ்குமார் அரசு அமைந்தபோது, மத்தியில் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் தலைமையிலான அரசு போதுமான நிதியை ஒதுக்கவில்லை. பாரபட்சமாக நிதி ஒதுக்கியது. ஆனால் பா.ஜ.க. தலைமையில்ஆட்சிஅமைந்தபோதுநிலைமை தலைகீழாக மாறிவிட்டது. பிஹார் மாநிலத்துக்குத் தேவையான அனைத்து நிதி உதவியையும் செய்து கொடுத்தோம். இதனால் பிஹார் மாநிலம் வளர்ச்சி அடைந்துள்ளது.

பிஹார் மாநிலத்தை வளர்ச்சி பெற்ற பிஹாராக நாம் மாற்றவேண்டும். தற்போது பிஹாரில் அனைத்து வளர்ச்சித் திட்டங்களும் வேகமாக நடைபெற்று வருகின்றன. இதற்கு மத்திய, மாநில அரசுகள் ஒன்றாக இணைந்து செயல்படுவதே காரணம். காங்கிரஸ் தலைமையில் ஜனநாயக முற்போக்குக் கூட்டணி அரசு 10 ஆண்டுகள் ஆட்சியில் இருந்தபோது பிஹாருக்கு 2 லட்சம் கோடி இந்திய ரூபா நிதி மட்டுமே கிடைத்தது.

பிஹார் வளமாக இருந்தால், நாடு வளமாக இருக்கும். பிஹார் இளைஞர்கள் வளமாக இருந்தால், பிஹார் வளமாக இருக்கும். இதைக் கருத்தில் கொண்டே மத்திய அரசுக்கு ஆதரவாக முதல்வர் நிதிஷ் குமார் தலைமையிலான அரசு செயல்படுகிறது. இளைஞர்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்புகளை வழங்கி வருகிறது.” என்றார்.









# வியட்நாமில் சுற்றுலா படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 34 பேர் பலி

சீரற்ற வானிலையால் வியட்நாமில் சுற்றுலாப் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 34 பேர் உயிரிழந்ததுள்ளனர். மேலும் பலர் காணாமல் போயுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வியட்நாமின் வடக்கே உள்ள பிரபலமான சுற்றுலாத் தலமான ஹாலாங் விரிகுடாவில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள், பெரும்பாலான பயணிகள் தலைநகர் ஹனோயிலிருந்து வருகை தந்த வியட்நாமிய குடும்பங்கள் என்று கூறப்படுகிறது.

பலத்த மழை, உயிர் பிழைத்தவர்களைத் தேடுவதில் இடையூறாக இருப்பதாக மீட்புப் பணியாளர்கள் கூறுகின்றனர்.

எனினும் இதுவரை 11 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

இந்த படகு நேற்று மாலை 53 பேருடன் பயணித்த போது விபத்துக்குள்ளாகியுள்ளது.










# 20 வருடங்களாக கோமாவில் இருந்த சவூதி அரேபியா இளவரசர் காலமானார்

சவுதி அரேபியாவின் இளவரசர் அல் வாலீத் பின் காலித் பின் தலால் அல் சவூத் தனது 36ஆவது வயதில் நேற்று காலமானார்.

தூங்கும் இளவரசர் என அழைக்கப்படும் இவர், 20 ஆண்டுகளாக கோமாவில் இருந்தார்.

2005ஆம் ஆண்டு இங்கிலாந்தின் லண்டன் நகரில் ஏற்பட்ட கார் விபத்தில் சிக்கி, அவர் கோமாவிற்கு சென்றார்.

இதன்படி, கடந்த 20 ஆண்டுகளாக கோமாவில் இருந்த இளவரசர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அவருடைய மறைவை, அல் வாலீத்தின் தந்தையான இளவரசர் காலித் பின் தலால் அல் சவூத் உறுதி செய்துள்ளார்.

# நடுவானில் திடீரென தீப்பிடித்த போயிங் பயணிகள் விமானம்



அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸில் இருந்து அட்லாண்டா நோக்கிப் பயணித்த போயிங் 767-400 ரக பயணிகள் விமானத்தின் இயந்திரத்தில், நேற்று திடீரென தீப்பற்றியுள்ளது.

இதன்காரணமாக குறித்த விமானம் மீண்டும் லொஸ் ஏஞ்சல்ஸில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

விமானம் தரையிறங்கியதும் தீயணைப்புப் படையினர் தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளனர்.

சம்பவத்தில் விமானத்தில் பயணித்த யாருக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பக்கங்கள் 03

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 20/07/2025

## சிறிய ரக விமானம் மோதி சிறுவன் ஒருவர் உயிரிழப்பு



கனடாவில், படகுத்துறையில் நின்ற சிறுவன் மீது 03

# கனடாவில் கார் திருட்டு சந்தேகத்தில் ஒருவர் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு




கனடாவின் மார்க்கம் மற்றும் டொரொண்டோ பகுதிகளில் கார் திருட்டு சந்தேகத்தில் ஒருவரை யார்க் பிராந்தியப் பொலிஸார் துப் பாக்கியால் சுட்டு காயப்படுத்திய சம்பவம் பதிவாகியுள்ளது.

மார்க்கம் பகுதியில் உள்ள கென் னடி சாலை மற்றும் கிளேட்டன் டிரைவ் சந்திப்பில் ஒரு சந்தேகத்துக் குரிய வாகனத்தை பொலிஸார் பின் தொடர்ந்துள்ளனர். 03

# மகளிர் உதைபந்தாட்ட வரலாற்றில் சாதனை செய்த கனடா வீராங்கனை



மகளிர் உதைபந்தாட்ட வரலாற்றில் முதல்முறையாக ஒரு வீராங்கனையை ஒரு மில்லியன் யூரோவிற்கு வாங்கி யுள்ளார்கள்.

கனடாவைச் சேர்ந்த ஒலிவியா ஸ்மித் (20 வயது) லிவர்பூல் உதைபந்தாட்ட அணிக்காக விளையாடி வருகிறார்.

இவரை ஆர்செனல் உதைபந்தாட்ட அணி ஒரு மில்லியன் யூரோ கொடுத்து வாங்கியுள்ளது.

20 வுமன்ஸ் சூப்பர் லீக் தொடரில் அறிமுகமானபோது ஒலிவியா ஸ்மித் 7 கோல்கள் அடித்தார்.

20 வயதான இளம் வீராங்கனை ஃபார்வேடாக லிவர்பூல் அணியில் விளையாடுகிறார். இவர் விங்கராகவும் சென்டர் ஸ்டிரைக்கராகவும் விளையாடக் கூடியவர்.

ஸ்போர்டிங் லிஸ்பென் அணியி லிருந்த ஒலிவியா ஸ்மித் கடந்த ஜுலை 2024 இல் லிவர்பூல் அணியில் சேரும் போதே 2 லட்சம் யூரோ சம்பளத்திற்கு சேர்ந்துள்ளார்.

கடந்த ஜனவரியில் அமெரிக்க வீராங் கனை நவோமி கிர்மா 1.1 மில்லியன் டொலருக்கு வாங்கியதே மகளிர் கால் பந்து வரலாற்றில் 03



# கனடாவின் ஸ்டீல் வரிகள் WTO விதிகளை மீறுகின்றன

## சீனா குற்றச்சாட்டு

கனடா சீனாவிலிருந்து இறக்குமதி செய்யும் ஸ்டீல் (உலோகம்) மீது 25 வீத வரி விதித்ததை சீனா கடுமையாக கண்டித்துள்ளது.

இது உலக வாணிப அமைப்பு (WTO) விதிகளை மீறுவதாகவும், உலக வர்த்தக ஒழுங்கை சீரழிக்கும் வகையில் இருப்பதாகவும் சீனாவின் ஒட்டாவா தூதரகம் தெரிவித்துள்ளது.

கனடா பிரதமர் மார்க் கார்னி, ஜூலை மாத இறுதிக்குள் சீனாவில் உருகிய ஸ்டீலை கொண்ட எந்தவொரு நாடு மூலமாக இருந்தாலும் 25 வீத வரி விதிக்கப்படும் என்று அறிவித்திருந்தார்.

இது, அமெரிக்கா விதித்த 50 வீத ஸ்டீல் வரிகளால், சீனாவின் ஸ்டீல் கனடாவில் "dump" செய்யப்படுவதை தடுக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகக் கருதப்படுகிறது.

கடந்த மாதம், கார்னி மற்றும் சீன பிரதமர் லீ கியாங் இரு நாடுகளும் வர்த்தக பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்க ஒப்புக்கொண்டிருந்தனர்.

அதேவேளை, சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மின் வாகனங்கள் மீது கனடா 100 வீத வரி விதித்து, அதன் விற்பனையை குறைத்தது. இதற்கு பதிலாக சீனா 2.6 பில்லியன் டொலர் மதிப்பிலான கனடிய வேளாண்மைப் பொருள்கள் மீது வரி விதித்து எதிர்வினை அளித்தது.

சீனா கூறுகையில்: "இந்த ஏற்றுமதி தடைகள் நியாயமற்றவை. அவை சீனாவுக்கும் கனடாவுக்கும் இடையேயான பொருளாதார உறவைப் பாதிக்கும். ஆனால் கனடா இந்த தகராறான நடவடிக்கைகளை நிறுத்தினால், சீனாவின் பதிலடி நடவடிக்கைகள் திரும்பப் பெறப்படும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.





# கனடாவில் காட்டுத் தீ காரணமாக 13.6 மில்லியன் ஏக்கர் நிலம் தீக்கிரை

கனடாவில் 2025-ஆம் ஆண்டில் மட்டும் 13.6 மில்லியன் ஏக்கர் (5.5 மில்லியன் ஹெக்டேர்) நிலத்தை காட்டுத் தீக்கள் சுட்டெரித்துள்ளன.

இது கிரொயேஷியா நாடுளவு பரப்பளவுக்கு சமமாகும் என கனடா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

2023 - வரலாற்றில் மிக மோசமான காட்டுத்தீ பருவம். 42.9 மில்லியன் ஏக்கர் நிலம் அழிந்தது.

2025 - இதுவரை 3,000 காட்டுத் தீக்கள் பதிவு. 561 தீக்கள் இன்னும் எரிகின்றன.

2023 இல் காட்டுத் தீ தளராத அளவுக்கு தொடர்ந்தது. ஆனால் இந்த ஆண்டு தீ பரவல் ஒரு இயல்பு நிலைக்கு திரும்பியிருப்பதை பார்க்கிறோம் என கனடாவின் இயற்கை வள அமைச்சகத்தின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.





## கனடாவில் கார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாலை 7 மணியளவில், டொரொண்டோவின் கென்னடி சாலை மற்றும் போனிஸ் அவென்யூ அருகே (ஷெப்பர்ட் அவென்யூ கிழக்கு பகுதியில்) அந்த வாகனத்தை நிறுத்த முயன்ற பொலிஸாருக்கும், காரில் இருந்த ஒரே ஆணுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

இதன் போது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபர், டொரொண்டோ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி நபருக்கு உயிராபத்து இல்லை என தெரிவிக்கப்படுகின்றது. இந்த சம்பவத்தில் எந்தவொரு பொலிஸாரும் காயமடையவில்லை என உறுதி செய்யப்பட்டுள்ளது.

## மகளிர் உதைபந்தாட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதிக சம்பளமாக இருந்து வந்தது. தற்போது, ஒலிவியா ஸ்மித் இதனை முறியடித்துள்ளார்.

மகளிர் சாம்பியன்ஸ் லீக்கை வென்ற ஆர்செனல் மேலும் அணியை வலுப்படுத்த இவ்வளவு தொகையைச் செலவிட்டுள்ளது.

## சிறிய ரக விமானம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிறிய ரக விமானம் ஒன்று மோதியதில் அவன் பரிதாபமாக பலியாகியுள்ளார்.

வெள்ளிக்கிழமை மதியம் 12.30 மணியளவில், கனடாவின் ஒன்ராறியோவிலுள்ள Caesarea என்னுமிடத்தில், சிறுவன் ஒருவன் படகுத்துறை ஒன்றில் நின்றுகொண்டிருந்திருந்துள்ளார்.

அப்போது, திடீரென ஒரு சிறிய ரக விமானம் வந்து அவர் மீது மோதியுள்ளது.

சிறுவன் மீது மோதிய அந்த விமானம், அருகில் நின்ற படகு ஒன்றின் மீது சென்று தலைகீழாக விழுந்துள்ளது.

இந்த விபத்தில் அந்த சிறுவன் உயிரிழக்க, விமானத்தை இயக்கியவரும் அவரது சக பயணி ஒருவரும் லேசான காயங்களுடன் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

அந்த விமானத்தில் ஏதேனும் பழுது ஏற்பட்டு அது விழுந்ததா, அல்லது, விமானத்தை அருகிலுள்ள ஏரியில் தரையிறக்க முயலும்போது அந்த சிறுவன் மீது மோதியதா என பல கேள்விகள் எழுந்துள்ளன.

சுமார் 800 பேர் மட்டுமே வாழும் Caesarea சமூகத்தில் சிறுவன் ஒருவனை பலிவாங்கிய இந்த துயர விபத்து சோகத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், எதனால் அந்த விபத்து ஏற்பட்டது என்பதை அறிவதற்காக பொலிஸார் விசாரணை ஒன்றைத் துவக்கியுள்ளார்கள்.

